புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# முல்லை நிலமும் உடைமை மரபும்

சு.ஷண்முகப்பிரியா
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
சமூக அறிவியல் & மொழிகள் புலம்
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்
திருவாரூர் – 610 005.

முனைவர் ச.சுபாஷ்
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை சமூக அறிவியல் & மொழிகள் புலம்
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்
திருவாரூர் – 610 005.

ஆய்வுச் சுருக்கம்

இந்திய இலக்கியச் சூழலில் திணைப்பாகுபாட்டின் தனிச்சிறப்பைச் சங்க இலக்கிய வகைகளுள் அறியமுடிகிறது. திணைகளுள் ஒன்றான முல்லைத்திணை இயற்கை சார்ந்த இருத்தல் கட்டமைப்பைப் பகரும் பாடுபொருள் அமைப்பைக் கொண்டது. உலகம் முழுவதும் பரவியிருக்கும் முல்லைப் பாடல்களின் பாடுபொருளுக்கு அடித்தளமாக இருப்பது இயற்கை ஆகும். கிரேக்கத்தில் தியோகிரடிஸ் அடியொற்றி இலத்தினில் வர்ஜில் *(VIRGIL)* வழிவந்த முல்லைக்கவிதைகளின் பாடுபொருள் இயற்கை, இசை, துக்கம், சோகம், காதல் முதலியனவாக இருந்தன. இத்தகைய சூழலில் தமிழ்க்கவிதை மரபில் முல்லைத் திணை மரபாக்கமாகச் செய்யப்பட்டதற்கு அடிப்படையாக அமைந்தது முல்லைநிலச் சமுதாயமாகும். இச்சமூகத்தின் படிநிலைப்படிவமாக இருப்பது அரசுருவித்து ஆகும். இயற்கைச் சூழமைவு, மக்கள் நிலைப்பாடு, அரசமரபு, பொருளியல் சூழல் முதலியவற்றின் துணையோடு முல்லைச் சமூகத்தின் தோற்றக்களமாக இருக்கும் உடைமைக் கொள்கை குறித்து படைப்புத்தளங்களில் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

குறிப்புச் சொற்கள்

முல்லை, அரசதிகாரம், அரசுருவாக்கம், ஆயம், ஆயர், இயற்கைக் கோட்பாடு, இருத்தல், இனக்குழு, உடைமை, கால்நடை, காடு, சமூகம் , நிலவியல், போர்மரபு, மன்னாயம்

## முன்னுரை

முதலும் முடிவுமாய் தொடர் இயக்கத்தில் சுழன்றுகொண்டிருக்கும் இயற்கையின் படைப்புத்திறனில் இயற்கையினையே அடுத்த நகர்விற்கு உட்படுத்தச் செய்யும் அபார ஆற்றல் வாய்ந்த உருவாக்கமாக அமையப்பெற்றதே மானிட உருவாக்கம். படைப்புச் சுழற்சியின் நிலைப்பாடாக விளங்கும் ஆக்க-அழிவு என்பது இந்த உருவாக்கத்திற்கும் இல்லாமலில்லை. ஆக்க-அழிவின் இடைப்பட்ட காலத்துடனான இயக்கத்தில் தன்னைத்தானே வளர்ச்சிப் படிநிலைக்கு உட்படுத்திக் கொள்வதற்கு இயற்கையினையே மனித உருவாக்கம் நாடியது. இங்கிருந்தே மானிட வாழ்வு தொடங்குகிறது. முல்லை நிலத்தில் மானிட வாழ்வு தொடங்குதற்கு அடித்தளமாக இருக்கும் நிலவியல், உடைமை மரபு போன்ற சமூகமரபை இக்கட்டுரை செவ்வியல் நூல்கள் வாயிலாக விளக்குகிறது.

*தொல்காப்பியத்தில் முல்லைச் சமூகம்*

*"நிலமும் பொழுதும் முதற் பொருள்" (தொல்.950) என்ற தொல்காப்பியரின் இயற்கைக் கோட்பாடு இங்குக் குறிப்பிடவேண்டிய ஒன்றாகும். மனித வாழ்வு தலையெடுத்ததில் முக்கியப்பங்கு வகித்தது நிலமும் காலமும் ஆகும். தொடக்கத்தில் இயற்கையினைத் தன் வாழிடச் சூழலாக அமைத்துக்கொண்ட மனிதன் அவ்விடத்தின் நிலத்தன்மையினை வைத்து மலை, காடு, சமநிலம், நீர்ப்பரப்பு ஆகியவற்றை அறியத் தொடங்கினான். "மாயோன் மேய காடுறை உலகமும்" (தொல்.951) எனத் தொடங்கும் தொல்காப்பியச் சூத்திரம்கூறும் நிலப்பாகுபாடு குறிப்பிட வேண்டியதாகும். இவ்வாறாக ஒவ்வொரு நிலப்பாகுபாட்டில் வாழும் ஒவ்வொரு அஃறிணை முதலாக உயர்திணை வரையிலான எல்லா உயிரினங்கட்கும் வாழ்வியல் வரையறை என்பது அவ்வந்நிலங்களால் உருவாக்கப்பட்டதுவே ஆகும். ஈண்டு வரையறை என்பது கட்டமைப்பு என்ற பொருள்தளம் பெற்றதாகும்.*

*சமூகம் – விளக்கம்*

*நிலப்பிரிவினையில் வாழ்வியல் கட்டமைப்பாகப் பொருள்படுவது 'சமூகம்' என்பதாகும். முதலில் சமூகம் என்ற சொல்லினைச் சொற்பிறப்பியல் அடிப்படையில் அணுகுதல் அவசியமாகும். 'சம்' என்ற வடமொழியில் இருந்தே 'சமூகம்' என்ற சொல் உருவானது. இது முற்றிலும் வட சொல்லாகும். ஆங்கிலச் சொல்லான 'Society' என்ற சொல்லின் தமிழாக்கமாக 'மன்னாயம்' என்ற சொல்லைக் கருதுதல் சிறப்பு. அஃது எவ்வாறெனின் மன் + ஆயம் என்று பிரித்தால் "கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவி என்று அம்மூன்று என்ப மன்னைச் சொல்லே" (தொல்.737) என்ற தொல்காப்பியச் சொல்லிலக்கணப்படி 'மன்' என்பது இச்சொல்லில் ஆக்கப்பொருள் பெற்று வந்துள்ளது. 'ஆயம்' என்றால் 'கூட்டம்' என்று பொருள்படும். சான்றாக, ''விளையாடு ஆயமொடு ஓரை அடாது'' (நற்.68) என்ற சங்க இலக்கிய அடியில் 'ஆயம்' என்பது 'கூட்டம்' என்ற பொருளேற்று வந்திருக்கிறது. எனவே கூட்டத்தில் ஓர் ஆக்கம் நடைபெறுவது என்ற பொருள் விரிநிலை செய்து 'மன்னாயம்' என்ற தமிழ்ச்சொல்லின் வழக்கு உருவாக்கப்படுகிறது. ''மன்னாயம், சமுதாயம், கூட்டு வாழ்க்கைக்குழு, நவநாகரிகக்குழு என்றெல்லாம் இச்சொல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது'' (சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ப.i). மன்னாயம் என்பதனைப் பொருள் நிலையில் காண்பது இச்சொல்லின் பயன்பாட்டை விளக்கும் விதமாக அமைகிறது. ''சமூகம் என்பது இயற்கையில் ஒழுங்கின்றித் தோன்றி வளர்ந்த காடன்று; வரம்புகோலியும் வரிசை அமையத் திருத்தியும் ஒழுங்கு சமைய உருப்படுத்தியும் காலமுறைப்படிக் கண்காணித்துப் பேணப்படுமோர் நன்னிலம் ஆகும்'' (மேலது., அணிந்துரை). சமூகம் என்பதன் ஆங்கில விளக்கம் "A society consists of all people who share a distinct and continuing way of life (that is, a culture and think of themselves as an united people)'' (Sociology: The Study of Human Interaction, pg. no. 33) என்பதாகும். அஃதாவது ''சமூகம் என்பது ஒரு வரையறுத்த தொடர்ச்சியான வாழ்க்கை முறை அல்லது பண்பாட்டைப் பெற்ற தமக்குள் ஒற்றுமையுடையவராக வாழும் மக்களைக் கொண்டது'' (சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ப. ii) என்பது மேற்கண்ட ஆங்கில விளக்கத்தின் தமிழாக்கம் ஆகும். மேற்கண்ட இந்த விளக்கத்தின்படி பழந்தமிழ்ச் சூழலில் முல்லைநிலச் சமூகத்தின் உருவாக்கம் குறித்து ஆராய வேண்டியது அவசியமாகிறது.*

*முல்லைநிலப் பெயர்கள்*

*சமூக வரையறையில் நிலவியல் சூழல் இன்றியமையாத இடம் வகிக்கிறது. அவ்வகையில் நோக்குங்கால் ஒரு நாட்டின் தலைப்பகுதியாக முனைப்பகுதியாக முல்லை நிலம் என்ற காட்டுப்பகுதியும், குறிஞ்சி நிலம் என்ற மலைப்பகுதியும் அமைந்துள்ளன. சங்க இலக்கியங்களில் முல்லை நிலமான காட்டுப்பகுதியினைக் குறிக்கப் பல்வேறு சொற்கள் கையாளப்பட்டுள்ளன. ''காடு, கானம், குறும்பொறை, கொல்லை, செந்நிலம், செஞ்சுவல், புறவு, புனம், புன்புலம், மென்புலம், முரம்பு, முல்லை, வன்புலம் போன்ற சொற்களால் முல்லை நிலத்தைக் குறித்துள்ளனர்'' (ஆயர்கள், ப.33). இலக்கியத் தரவுகளின் அடிப்படையில் காடுகளில் மக்கள் வாழ்ந்தனர் என்பது இதிலிருந்து புலனாகிறது. காடுகளில் வாழ்ந்த மக்கள் சமூகத்தின் வாழ்விடங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்ற எங்கெல்ஸ், ''பழங்காலத்தில் மக்கள்தொகை நெருக்கம் இல்லாதிருந்தது. இனக்குழுக்கள் வசித்த இடங்களில் மட்டும்தான் மக்கள்*

*அடர்த்தியாக இருந்தார்கள். அந்த இடம் பரந்த வேட்டைக்காடுகளால் சூழப் பெற்றிருந்தது. இவற்றிற்கு அப்பால் மற்ற இனக்குழுக்களிலிருந்து அதைப் பிரித்துப் பாதுகாப்பு அளிக்கின்ற நடுநிலைக்காடு இருந்தது'' (குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், ப. 204) என்கிறார். காடுவாழ் பழந்தமிழ் மக்கள் காட்டு நிலமான முல்லைச் சமூகத்தின் நிலவியல் கூறுகளை வெப்பமண்டலக் காடுகளாகவும் பசுமைமாறாக் காடுகளாகவும் சதுப்புநிலக் காடுகளாகவும் பிரித்திருந்தனர்.*

*நிலவியலும் இனக்குழுவும்*

*பழந்தமிழகத்தின் பரப்பளவில் பாதிக்கும்மேல் காடுகளாக இருந்தன. ''6-9 மீட்டர் உயரமுள்ள மரங்களோடு முட்புதர் மண்டிச் சமவெளிப் பகுதிகளில் காணப்படும் தென்வெப்பமண்டலக் காடுகளையும் 80 பாகைவரை புழுக்கத் தன்மை மிக்கக் கிழக்குக்கடற்கரை ஓரங்களில் காணப்படும் வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகளையும் கடல்நீர் பாய்ந்து வற்றி உதிர்ந்த இலைகள் அழுகிக் காணப்படும் கடற்கழிச் சதுப்பு நிலக்காடுகளையும் முல்லை நிலங்களாகப் பழந்தமிழர்கள் கருதினர்'' (தமிழ்நாட்டு வரலாறு தொல் பழங்காலம், ப.44). எனவே, மக்கள் வாழ்வியலைக் காடுசார் சமூகத்திலும் மேற்கொண்டுள்ளனர் என்பது நன்கு புலனாகிறது. அலைகுடிச் சமூகத்திலிருந்து நிலைகுடி மாற்றத்தை அடைந்த சமூகமாக முல்லை அடையாளப்படுத்தப்படுகிறது. இங்குதான் இனக்குழுக்கள் அதிகரிக்கத் தொடங்கின. இனக்குழுக்களின் அடையாளங்களான போர்மரபும் உடைமைப் பெருக்கமும் முல்லைச் சமூகத்தில்தான் வேரூன்றத்தொடங்கின. இனக்குழு என்று குறிக்கின்றபோது அச்சமூகத்தின் மக்கள்பிரிவினைப் பற்றிக் கட்டாயம் அறிய வேண்டியுள்ளது. வேட்டைச் சமூகத்திலிருந்து கால்நடை சமூகத்திற்குப் படிநிலை வளர்ச்சி அடைந்திட்ட முல்லைநில மக்கள் கால்நடைகளைத் தம் சொத்தாகப் பார்க்கத் தொடங்கினர். முல்லை, குறிஞ்சி முதலான நிலப்பகுதிகளில் வாழும் மக்களைப் பாதுகாக்கும் விதமாக தலைமை என்னும் நிலையில் சமுதாய அமைப்பு இருந்தது. ஒரு சமூகத்தில் அரசுருவாக்கம் அமைவதற்கு அடித்தளமாக இருப்பன நிலம், மக்கள், சமயம், பொருளாதாரம் ஆகிய நான்கு கட்டமைப்புகள் ஆகும். எனவே, மக்கள் கட்டமைப்பின் தலைமை முல்லைச் சமூகத்திற்குள் எவ்வாறு இருந்தது என்பதை அறியவேண்டும்.*

*அரச மரபு*

*காட்டு நிலங்கள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிந்திருந்தன. இந்தக் குறுநிலங்களுக்கு உரிமைப்பூண்டவர்களான இனக்குழுத் தலைவர்கள் ஓரூர் மன்னன், சீறூர் மன்னன் என்று அழைக்கப்பட்டனர். இதிலிருந்து மன்னனுக்கும் வேந்தனுக்கும் உள்ள வேறுபாடு நன்கு புலனாகிறது. வேந்தனை மன்னன் என்று கூறும் வழக்கு பெரும்பாலும் இல்லை. மன்னனை வேந்து எனக் குறிப்பிடும் வழக்கம் இல்லை. சங்க இலக்கியங்களில் வேந்தனுக்கும் குறுநில மன்னனுக்குமான வேறுபாடு சில பாக்களில் தெளிவுபடுத்தப் பெற்றுள்ளது. ''மன்னர் ஏவல்செய்ய மன்னிய வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே'' (புறம்.35) என்ற மாங்குடிகிழாரின் பாடல் வரிகள் இதற்குச் சான்றாகும். சேர, சோழ, பாண்டியன் ஆகிய மூவர் மட்டுமே 'வேந்து' என்ற அடையாளத்திற்கு உட்பட்டவர்கள். "முரசு முழங்குதானை மூவருள்ளும் முற்றிய திருவின் மூவர் ஆயிடை" (புறம்.205) என்பன போன்ற பாடல்கள் இதற்குச் சான்றுபகர இயலும். அவ்வகையான் படைப்பாக்கத்தில் முல்லைத்திணை ஆடவரின் பிரிவுத் தொழிலில் ஒன்றாக வேந்துவிடு தொழிலும், மற்றொன்றாக வினைவயின் பிரிவும் அமைந்துள்ளது. இவற்றுள் 'வேந்துவிடு தொழில்' என்பது தனக்கு மேலே இருக்கும் ஒரு வேந்தன் தனக்கு விடுத்த தொழிலை நிறைவேற்றும் வகையான் அமைந்த பிரிவு ஆகும். இதனைப் பொருள்நிலை விரிவாக்கம் பெற்று நோக்கினால் முல்லைநிலச் சீறூர் மன்னர்கள் வேந்தர்களின் கட்டுப்பாட்டில் இருந்தமை தெரியவருகிறது. இவ்வாறு ஒருபுறம் இருக்க முல்லைச் சமூகத்தில் போர்மரபு மட்டுமில்லாமல் உற்பத்தியும் ஒரே நேர்க்கோட்டில் இருந்துள்ளது.*

*போரில் ஈடுபடாத முல்லைநில மக்களும் தம் வாழ்க்கையினை நடத்தி வந்துள்ளனர். முல்லை நிலத்தின் மேய்ச்சல் நிலமும் கால்நடை வளர்ப்பிற்குச் சூழமைவும் உற்பத்திக்கு ஏற்றக்களன்களாக அமைந்தன. காட்டு நிலங்களில் அலைந்த விலங்கினங்களைத் தம்முடன்*

பழக்கப்படுத்திக்கொண்டு அவற்றைப் பேணத்தொடங்கி அவற்றின் மூலமாகத் தன்னுடைய பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டனர். ஆடு, மாடு, எருமை போன்ற விலங்குகளே முதன்மைக் கால்நடைகளாக இருந்தன.

*மக்கள் நிலைப்பாடு*

*முல்லை நிலத்தில் பலவகை மக்கள் குழுக்கள் இருந்தன. ஆயர் என்னும் பெயர் பொதுப்பெயராகும். " ஆ என்ற சொல் மாட்டைக் குறிப்பதால் இதனுடன் '-அர்' விகுதி இணைத்து ஆயர் என்று வழங்கப் பெற்றனர்" (ஆயர்கள், ப.34). எனில் இக்கருத்தில் ஒரு முரண்பாடு தென்படுகிறது. ஆக்களை மேய்ப்பதால் அவர்கள் ஆயர் என்று அழைக்கப்பட்டனர் என்ற காரணத்தை நோக்குங்கால் மாடுகளை மேய்ப்பவருக்கு மட்டுமே முக்கியத்துவம் தருவது போன்ற கருத்து எழுகிறது. அவர்களுக்கு ஆக்களை (மாடு) மட்டும் மேய்த்திடும் பழக்கம் இல்லை. எருமைகள், ஆடுகள் இவற்றையும் கால்நடைச் செல்வங்களாகக் கருதியுள்ளனர். கோவலர், இடையர், கோட்டினத்தாயர் என்று பலதரப்பட்ட முல்லை மக்களும் இருந்துள்ளனர். எனவே முன்னர் பகன்றதுபோல் மன்னாயத்திலுள்ள 'ஆயம்' என்ற சங்கச் சொல்லாடல் 'கூட்டம்' என்ற பொருள் தோன்றி நிற்பதை நோக்குங்கால், கூட்டமாக இருக்கும் விலங்கினங்களை வளர்ப்பதாலும், ஆயர் அல்லது இனக்குழுத் தோன்றினமையின் அடையாளமாக இருக்கும் மக்கள் குழுவாக வாழ்ந்தமையாலும் ஆயர் எனப் பெயர் பெற்றனர் என்று கருதுவது நியாயம் பயக்கும். இவ்வாறு கருதுவது நியாயம் பயக்கும் என்று கூறுவதன் காரணம் யாதெனில் இன்றளவிலும் முல்லைநிலம், கால்நடைச் சமூகம் என்றெல்லாம் பொதுத்தளத்தில் குறிப்பிடும்போது அ - பசு - மாடு என்ற ஒற்றை விலங்கினம் மட்டுமே முதன்மை அடையாளம் பெறுகிறது. அதே சமூகத்தில் உள்ள செம்மறியாடு, வெள்ளாடு, காளை, எருமை முதலிய விலங்குகள் முதன்மைக்கு உரியதாய் பொதுத்தளத்தில் பார்க்கப்படுவதில்லை. "மாடல்ல மற்ற யவை" (குறள்.400) என்பதில் 'மாடு' என்ற சொல் 'செல்வம்' என்ற பொருண்மைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் நுண்ணரசியல் புலனாகிறது. ஆயின் ஆடு, கோடு (எருமை) முதலிய சொற்கள் 'செல்வம்' என்ற பொருண்மைக்கு அப்பாற்பட்டு நிற்கின்றன. மாடு - செல்வம் என்பது ஆயர் இனத்தின் கால்நடை பொதுச்சொல். ஆ – ஆயர் – மாடு - செல்வம் எல்லாமே கால்நடைச் சமூகத்தின் குறியீடு என்பதெல்லாம் மேம்போக்கானப் புரிதல். உண்மையில் பசுமாட்டினைப் புனிதப்படுத்தும் வித்து இங்கிருந்து தோன்றியிருக்கக்கூடும் என்ற சிந்தனை எழுகிறது. தாய்மைக்கு இணையாகப் பசுமாட்டினைப் பார்ப்பதுபோல், ஆட்டையோ எருமையையோ அவை விளைபொருள் தரினும் பார்க்கப்படுவதில்லை. ஆயர் - ஆ என்ற சொல்லின் நுண்ணரசியல் மேலும் ஆய்வு செய்யப்படவேண்டிய ஒன்றாகும். ஆயினும் பிற்காலப் படைப்பாக்கமாகக் கருதப்படும் கலித்தொகையில் 'ஏறுதழுவல்' குறிப்பிடும் கோட்டினத்துச் சமூகம் சார்ந்த முல்லைக்கலி உருவாக்கம் அடைந்தது ஈண்டு குறிப்பிடத்தக்கது. "தண்டுகால் ஊன்றிய தன்னிலை இடையன்" (அகம்.274), "முல்லை வியன்புலம் பரப்பி கோவலர்" (அகம்.14), "தின்தேர் நள்ளி கானத்து அண்டர்" (குறு.210), "அறவை நெஞ்சத்து ஆயர்" (புறம்.390) என்ற சான்றுகளின் ஊடாக இடையர், கோவலர், அண்டர், ஆயர் முதலிய பல பிரிவினராக மக்கள் இருந்தமைப் புலப்படுகிறது. இந்த ஆயர்களுள் ஒருசாரார் மறத்தன்மை பெற்றிருந்தமைக்குச் சான்றினை "அறவைநெஞ்சத்து ஆயரும் வளரும் பாலை நெஞ்சத்து ஆயிலாளரும்" (புறம்.390) என்ற இவ்வரிகள் மூலம் பெறமுடிகிறது. இத்தகைய மக்கள் சூழமைவைப் பெற்றிருந்த முல்லைச் சமூகத்தின் போர்மரபும் உடைமைப்பெருக்கமும் இன்றியமையாத பகுதிகளாகும்.*

*பொருளியல் சூழல்*

*முல்லை நிலத்தின் உற்பத்திச் சமூகத்திலிருந்துதான் போர்ச்சமூகம் தோன்றியிருக்க வேண்டும். இதனை நிறுவுவதற்கு 'PHYSIOCRACY' என்ற மேலைநாட்டுப் பொருளாதாரக் கோட்பாடு தேவைப்படுகிறது. அஃதாவது ஒரு நாட்டின் வளம் என்பது முற்றிலுமாக நிலத்தின் மதிப்பீட்டில் இருந்தே பெறக்கூடியதாகும். இந்தக் கோட்பாட்டினை முல்லைச் சமூகத்தில் பொருத்திப் பார்த்தால் உற்பத்தி முயற்சிக்கு அடித்தளமாக இருக்கும் நிலவளமும் வேளாண்வளங்களுமே அந்நாட்டின் வளமைக்குக் காரணமாக இருந்திருப்பது தெரிகிறது. இதில் வேளாண்வளனில் கால்நடைகள் முதன்மைப்பங்கு வகிக்கின்றன. மேலும் இந்தப் பொருளியல் கோட்பாட்டினை ஆராயுங்கால் "Physiocrats were not merely a school of economic thought; they were a*

*school of political action" (The Physiocrats, Pg. No. 7)* என்ற ஹென்றி ஹிக்ஸின் கூற்று முல்லைநிலச் சூழலில் பொருத்திப் பார்க்க வேண்டியதாகும். அஃதாவது *'Physiocrats'* என்கிற நிலம்சார் பொருளியல் கோட்பாடு என்பது வெறும் பொருளாதாரச் சிந்தனை மரபு அல்ல. அஃது ஓர் அரசியல் நடவடிக்கை மரபின் தோற்றுவாயாகும். இக்கருத்தை நோக்குங்கால் உற்பத்திச் சமூகமாக உருவெடுத்து நிலைக்குடிகளாக மாற்றம் பெற்றிருந்த முல்லைநில மன்னாயத்தில் கால்நடைகள்தான் அவர்களின் வேளாண் மற்றும் உற்பத்திக்கு ஏதுவாக இருந்தன.

பழந்தமிழ்ப் போர்மரபானது புறத்திணைகளில் வெட்சி, கரந்தை என்ற தோற்ற நிலைகளை உள்ளடக்கியதாம். வெட்சியும் கரந்தையும் நிரைகவர்தல், நிரைமீட்டல் என்ற இரு பொருண்மையிடத்து எழுந்த போர்மரபாகும். இதற்கு, "ஆதந்து ஓம்பல் மேவற்று அல" (தொல்.1006), "தலைக்கொண்ட நிரை பெயர்த்தன்று" (புற.வெ.மா.22) என்ற இலக்கணச் சான்றுகள் உள்ளன. கால்நடைகளைக் கவர்ந்து அதன்மூலம் பொருளாதாரத் தன்னிறைவுப் பெற்று அந்நாட்டின்மீது உரிமைப்பூணும் ஓர் அரசதிகாரப் போர்மரபுச் சிந்தனை இந்நிலையில் இருந்து தோன்றியது என்று கருதுவது பொருந்தும். *"Agriculture was the fundamental industry of the country. Liberty and Security were its chief requisites" (The Physiocrats, Pg. No. 18).* அஃதாவது ஒரு நாட்டின் அடிப்படையாக இருக்கும் வேளாண்மைக்குச் சுதந்திரமும் பாதுகாப்பும் முக்கியத் தேவைகள் ஆகும் என்ற இந்தக் கருத்தினை ஆழ்ந்து நோக்குங்ககால் முல்லைச் சமூகத்தின் வேளாண் வளத்திற்குத் தாக்குதலும் அடிமைத் தளமும் இருந்திருக்கக்கூடும் என்பதை வெட்சி, கரந்தை உள்ளிட்ட போர்மரபு அடையாளங்களைக் கொண்டு விளங்கிக்கொள்ள இயல்கிறது. இவ்வாறான சூழமைவிலுள்ள உற்பத்தி மற்றும் போர்ச்சமூகத்தில் உடைமைப் பெருக்கம் வேரூன்றத் தொடங்கியது.

### உடைமைச் சமூகம்

உடைமை என்பது பொருளை மட்டும் குறிப்பிடுவது அல்ல. அப்பொருளின் மீதுள்ள உரிமையையும் குறிப்பதாகும். "அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்" (தொல்.698) என்ற சூத்திரத்திற்கு உரைகாணும் சேனாவரையர் உடையானது உடைமைத் தன்மையே அன்றி உடைப்பொருளும் உடைமை எனப்படுதலின் உடைமை யானும் என்பதற்கு உடைபொருட்கண்ணும் எனவும் உரைக்க என்று கூறுகிறார். அஃதாவது உடைமை எனப்படுவது உரிமை மட்டுமல்லாமல் அஃது உரிமையினைக் கொள்ளச் செய்யும் உடைபொருளும் இதன் வகைத்தாகும். எனில் உடைமைத் தன்மையும் உடைமைப் பொருளும் இணைந்ததே 'உடைமை' என்பதாகும் என்ற கருத்து இதன்கண் விளங்கிக்கொள்ள முடிகிறது. இதன்வழி பழந்தமிழ்ச் சூழலில் உடைமைச் சிந்தனை இருந்தது என்பதை இலக்கணமரபாக்கத்தின் ஊடேயும் அறிந்துகொள்ள இயல்கிறது. உடைமைப் பெருக்கத்தால் விளைந்தது தனியுடைமை, குடும்பவுடைமை மற்றும் கூட்டுடைமை என்ற வகைப்பாடுகள் ஆகும். நிலத்தை எல்லையிட்டுப் பிரித்து வேளாண் செய்யும் முல்லைச் சமூகத்தில் உபரியைச் சேமிக்கும் பழக்கமும் தொடங்குகிறது. இதற்குச் சான்றாகப் "பாலொடு வந்து கூழொடு பெயரும்" (குறு.221)' "பால்நொடை இடையன்" (நற்.142) என்ற வரிகள் உள்ளன. இது தனியுடைமையின் வளர்ச்சி அடையாளங்கள் ஆகும்.

### முடிவுரை

கால்நடை பெருக்கத்தினூடாக விளைந்ததே முல்லைச் சமூகத்தின் குடும்ப உடைமையாகும். இச்சமூகம் கால்நடையின் வழியில் ஒரு சொத்து வடிவத்தைப் பார்க்கத் தொடங்குகிறது. கூட்டுடைமை என்பது மிகவும் பழங்கால மரபாகும். வேட்டைச் சமூகத்தை விளக்கும் தன்மைத்தாகும். இதன் பொருட்தொகுப்பை நோக்குங்கால் உடைமைப் பிரிவிலும் ஆணே அதிகாரம் செலுத்துபவனாக இருந்துள்ளான். கால்நடையிலும் நிலத்திலும் உரிமையாளனாக ஆண் விளங்குகிறான். ஆண் உரிமைக் கொண்ட நிலையில் பெண்ணை அதில் பங்கு மட்டுமே பெறச்செய்ய ஆணாதிக்க வடிவம் தூண்டியது. இத்தகைய போர்மரபு ஊன்றப்பட்ட ஆணாதிக்கச் சூழலில் முல்லைச் சமுதாயத்தின் உடைமைக்கொள்கையே குடும்பம், அரசுருவித்து என்ற சமூகமரபுக் கட்டமைப்பிற்கும் பெண்ணிய ஒடுக்கு நிலை, பெண்வர்க்கப் பாகுபாடு, கற்புக் கோட்பாடு, இருத்தல் மரபாக்கம் என்ற பால்பாகுபாட்டுக் கட்டமைப்பிற்கும் அடித்தளமாக அமைகிறது.

*பார்வை நூல்கள்*


1. *ஃபிரடெரிக் எங்கெல்ஸ், குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2011.*
2. *கருணாகரன், சா., ஆயர்கள், தடாகம் பதிப்பகம், சென்னை, 2021.*
3. *சாமிநாதையர், உ., வே., (ப.ஆ.), புறப்பொருள் வெண்பாமாலை, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, 1924.*
4. *செயபால், இரா., (உ.ஆ.), அகநானூறு (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.*
5. *தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவினர் (அளிப்போர்), தமிழ்நாட்டு வரலாறு தொல் பழங்காலம், தமிழ்நாடு அரசு வெளியீடு, 1975.*
6. *நாகராசன், வி., (உ.ஆ.), குறுந்தொகை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.*
7. *நாமக்கல் கவிஞர் (உ.ஆ.), திருக்குறள், தென்றல் நிலையம், சிதம்பரம், 2002.*
8. *பாலசுப்பிரமணியன் கு. வெ., (உ.ஆ.), நற்றிணை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.*
9. *பாலசுப்பிரமணியன் கு. வெ., (உ.ஆ.), புறநானூறு (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.*
10. *பாலசுப்பிரமணியன், கு.வே., சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், 1994.*
11. *மாணிக்கவாசகர், (உ.ஆ.), தொல்காப்பியம், உமா பதிப்பகம், சென்னை, 2006.*
12. *David Dressler & William M. Willis, Sociology : The Study of Human Interaction, Knopf, 1976.*
13. *Henry Higgs, The Physiocrats, The Macmillan Company, 1897, Batoche Books Limited, Canada, 2001.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********